Arimaa Nokku

# அரிமா நோக்கு

15: 2 ஜூலை 2021

ISSN 2320-4842

ஆசிரியர்: ஈரோடு தமிழன்பன்



மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு, மெய்யியல், அறிவியல்சார் பன்னாட்டுக் காலாண்டிதழ்

International Quarterly on Language, Literature, Art, Culture, History, Philosophy and Science

ISSN 2320-4842

அரிமா நோக்கு
15 : 2 ஜூலை 2021

# தலைவாயில்

ஈரோடு தமிழன்பன்

## ஆக்கம் தரும் அறிவிப்புகள்

தமிழக முதல்வராக மு. க. ஸ்டாலின் பொறுப்பேற்றதும் வெளியிட்ட சில அறிவுப்புகள் மொழிசார்ந்து உழைத்துவருபவர்களுக்கு மகிழ்ச்சியும் ஊக்கமும் ஊட்டும் வகையில் அமைந்திருக்கின்றன.

தமிழ்மொழிக்குத் தலையாய படைப்புப் பணிபுரிபவர் ஐவருக்கு ஆண்டுதோறும் இலக்கிய மாமணிப் பட்டத்தோடு ஐந்து இலக்கம் வெண்பொற்காசுகள் வழங்கப்படும். தேசிய அளவிலான சாகித்திய அகாதெமி, ஞானபீடம் போன்ற பரிசுகள் பெற்றவர்களுக்கு அவர்கள் வாழும் இடத்திலோ விரும்பும் இடத்திலோ வீடுகள் வழங்கப்படும்.

மக்கள் முதல்வராகப் போற்றத்தக்க நிலையில். மு.க. ஸ்டாலின் செயல்படத் தொடங்கியுள்ள தோற்றுவாயில் மொழிப் பணியாளர்களாம் படைப்பாளிகளை உள்ளம் கொண்டதைப் பாராட்டுகிறோம். இவ்வறிவுப்புகள் தமிழ் மொழி உலகை உவப்பால் தலைநிமிரச் செய்துள்ளன.

படைப்பாளன் பட்டினியில் கிடந்தால்தான் வளமான இலக்கியம் கிடைக்கும் என்ற பட்டினிக் கோட்பாடு [hunger theory} ஒரு காலத்தில் எழுத்தாளனுக்குப் பரிந்துரை செய்யப்பட்டது உண்டு. பாப்லோ நெருடா ஒரு முறை சொன்னான், 'புண்ணிலிருந்து சீழ் வடியுமே தவிரப் புன்னகை மலராது' என்று.

நெருடா நோபல் பரிசு பெற்ற பிறகு கிடைத்த தொகையைக் கொண்டு எழுத்தாளர்களுக்கு ஒரு குடியிருப்பை உருவாக்க முயன்றான். 1971இல் நோபல் பரிசு பெற்ற பெருமிதத்தை அவனைப் பெற்ற சிலே எப்படிக் கொண்டாடியது தெரியுமா?

ஓர் ஊருக்கே பாப்லோ நெருடா என்று பெயர் வைத்தது. அதன் ஒவ்வொரு தெருவுக்கும் அவன் எழுதிய நூல்களின் பெயர்கள். கவிதையை, கவிஞனை அந்தத் தென்னமெரிக் கச் சிலே மண் எப்படி மதித்திருக்கிறது பாருங்கள்.

முதல்வர் மு.க. ஸ்டாலின் வியக்கத்தக்க வேகத்தோடும் விவேகத்தோடும் நேரிய முறையில் ஆள வேண்டும் என்னும்

மனித நூலகம்
- வ. ஜெயதேவன் 03
ஆறுமுகநாவலரின் பதிப்பாசிரியச் செயன்மைகள்
- த. ஜான்சிராணி 05
ஆயிரம் ஆண்டுகளுக்குமேல் தொடர்ந்துவரும் 'மியா' - சரியா?
- வாணி அறிவாளன் 10
பயன்பாட்டு நோக்கில் மொழி முதல் எழுத்துகள்
- பா. ஜெய்கணேஷ் 18
குறுந்தொகை: தொடரியல் பகுப்பாய்வு
- வ. தனலட்சுமி 25
கவிஞர் சுரதா - ஓர் உவமை அருவி
- ம. பெ. சீனிவாசன் 35
தொல்காப்பியரின் மொழிக்கோட்பாட்டில் விளிமரபு
- எல். இராமமூர்த்தி 38
முல்லைப்பாட்டின் புலம்பு முத்து: உணர்ச்சிப்பொருண்மை
- ப. கொழந்தசாமி 42
சங்க காலச் சோழ வரலாறு: மீளாய்வு
- போ. ஜான்சன் 44
வயதுவந்தோர் கல்வியில் புதிதாக எழுதப் படிக்கக் கற்போருக்கான (Neo-literates) தமிழ் எழுத்தறிவு நூல்கள் (Tamil Premiers): ஒரு பார்வை
- சொ. மகாதேவன் 52
தாய்வழிச் சமூகம்
- வே. நிர்மலர் செல்வி 61

ISSN 2320-4842

தாகத்தோடும் ஓய்வொழிவில்லாமல் உழைக்கிறார். அவர் வெற்றி பெற வாழ்த்துகிறோம்.

**கட்டுரையாளர்கள்**
**ஒருங்குறி (UNICODE) எழுத்துருவில் மட்டுமே**
**கட்டுரை அனுப்ப வேண்டும்.**

*ஆசிரியர்*
**ஈரோடு தமிழன்பன்**
*இணையாசிரியர்*
**வ. ஜெயதேவன்**
*ஆசிரியர் குழு*
நா. கணேசன் (அமெரிக்கா)
நா. சுப்பிரமணியன் (கனடா)
பொன். செல்வகணபதி
ஒப்பிலா மதிவாணன்
சீதா லட்சுமி (சிங்கப்பூர்)
மு. பரமசிவம் (மலேசியா)
பத்மாவதி விவேகானந்தன்
இரா. பிரேமா
பா. இரவிக்குமார்
மருதூர் அரங்கராசன்
பெ. இலக்குமிநாராயணன்
*அறிவுரைக் குழு*
இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் உள்ள தமிழியல் அறிஞர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள்
மற்றும்
படைப்பாளிகள்
*பதிப்பாளர்*
இரா. பன்னிருகைவடிவேலன்

## கட்டண விவரம்

| | | | |
|---|---|---|---|
| வாழ்நாள் கட்டணம் | ரூ. 3500/- | US | $ 150 |
| புரவலர் கட்டணம் | ரூ. 5000/- | US | $ 200 |
| பெரும்புரவலர் கட்டணம் | ரூ. 10,000/- | US | $ 500 |
| நிறுவனம்சார் உறுப்பினர் (Institutional Membership) | ரூ. 15,000/- | US | $ 700 |

### விளம்பரக் கட்டணம்

| | |
|---|---|
| பின்னட்டை (பல வண்ணங்கள்) | ரூ. 15,000/- |
| உள்ளட்டை (பல வண்ணங்கள்) | ரூ. 10,000/- |
| முழுப்பக்கம் (கருமை & வெண்மை) | ரூ. 3, 000/- |
| அரைப்பக்கம் (கருமை & வெண்மை) | ரூ. 1, 500/- |